இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 03 MARCH -2023

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்

**WWW.JESUSLIVES.IN**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தேவகிருபையினால் கடந்த ஜனவரி 21-ஆம் தேதி அன்று மதுரையில் நடைபெற்ற உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தீர்க்கதரிசியாகிய அன்பு சகோதரர் வின்செண்ட் செல்வகுமார் அவர்களை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தினார். தேவன் ஜனங்களுக்கு வைத்திருக்கிற உன்னத திட்டத்தை வெளிப்படுத்தி ஜெபித்த போது அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். கர்த்தருடைய நாமம் மதுரை பட்டணத்தில் மகிமைப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமைகளிலும் இந்த ஜெபம் மதுரை பைபாஸ் ரோட்டில் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் வைத்து நடைபெறும் நீங்களும் வாருங்கள், உங்களுக்குத் தெரிந்தவர்களையும் அழைத்து வாருங்கள். மட்டுமல்ல கடந்த பிப்ரவரி மாதம் 2,3,4 ஆகிய தேதிகளில் திருப்பத்தூரில் நடைபெற்ற 69-ஆவது பரிசுத்த உபவாச முகாமையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஏறக்குறைய 5000-க்கும் அதிகமான ஜனங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக மன்றாடி ஜெபித்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. கர்த்தர் எல்லா ஊழியர்களையும் வல்லமையாக பயன்படுத்தினார். மேலும் செம்பட்டியில் நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து நடைபெறும் உபவாச ஜெபத்தை இரண்டு நாட்களாக மாற்றியுள்ளோம். வெளியூர்களிலிருந்து அநேகர் வந்து தங்கி ஜெபித்துச் செல்லுகிறார்கள். மார்ச் மாதம் 10,11-ஆகிய தேதிகளில் அங்கு உபவாச ஜெபம் வைத்திருக்கிறோம். நீங்கள் கலந்து கொள்ள அன்பாய் அழைக்கப்படுகிறீர்கள். தொடர்ந்து நமது சோஷியல் மீடியா நிகழ்ச்சிகளான **கர்த்தாவே என்னை கைதூக்கி** விடும் நிகழ்ச்சியும், (திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணிக்கு) தினந்தோறும் காலையில் 5 மணிக்கு ஒளிபரப்பாகும் **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. இனி ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாள் இரவு 10.30 மணி முதல் மாதத்தின் முதல் நாள் 1-ஆம் தேதி காலை 12.30 மணி வரைக்கும் **நம்பிக்கையின் இரவு** என்ற புதிய நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சிகளை நீங்களும் பாருங்கள், மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். மேலும் ஊழியத்திற்கு தேவையான உபகரணங்கள் கம்யூட்டர்கள் கேமராக்கள் வாங்கவும், அதன் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள். இந்த ஊழியத்தை மறவாமல் நேசித்து, ஜெபித்து தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vinvent Raj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

# ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜெபங்கள் தள்ளப்பட்ட ஜெபங்கள்



*சகோ.L.வின்சென்ட்ராஜ்*

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன். இன்றைய உலகில் வாழும் மனிதர்களில் அதிகமான பேர் பக்தியுள்ளவர்கள், தேவ நம்பிக்கையுள்ளவர்கள். தேவன் யார் என்று தெரியாவிட்டாலும் பிராத்தனை, ஜெபம்பண்ண வேண்டும் என்ற உணர்வு உள்ளவர்கள். உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், நாட்டை ஆள்பவர்கள். ஏதாவது ஒரு அசம்பாவிதம் அல்லது இழப்பு, மரணம் ஏற்பட்டால் பிராத்தனை செய்கிறோம் என்பார்கள். செய்கிறார்களோ இல்லையோ சொல்லி விடுவார்கள். யாரிடத்தில் ஜெபிக்க வேண்டும்?, எங்கே ஜெபிக்க வேண்டும்?, எந்த ஜெபம் கேட்கப்படும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. சிலர் அறிந்த ஆண்டவரிடத்தில் ஜெபிப்பார்கள். அவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் பதில் கொடுப்பாரா? இல்லையா? தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அநேக தேவர்களும், அநேக கடவுள்களும் வானத்திலும், பூமியிலும் உண்டு என்றார். கடவுளுக்குப் பஞ்சமில்லாத பூமி. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **1 கொரி 8:5-ல் வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டு என்றார்** சிருஷ்டித்தவரைத் தொழாமல், சிருஷ்டியைத் தொழுகிறார்கள், படைத்தவரை மறந்து படைப்புகளைத் தொழுது கொண்டிருக்கிறார்கள். **பிலி 3:19-ல் அவர்கள் முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை இலச்சையே,**

அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி அறியாமல், தெரியாமல் தொழுது கொள்கிற எல்லா ஜெபங்களும், எல்லா பிராத்தனைகளும் காற்றோடு போய் விடும். அது ஆகாயத்தில் காற்றோடு பறந்து விடும். 1 கொரி 9:26-ல் ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன் என்று சொல்லப்பட்டுள்ள, அர்த்தமற்ற ஜெபங்கள், கடமைக்கான ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை. தேவ சமூகத்தில் எட்டு வதில்லை. ஜெபம் என்பது நேரத்தை போக்குவது அல்ல அது அர்த்தமுள்ளது. இயேசு சொன்னார் யோவான் 4:22-ல் நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள், நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம் என்றார். ஒருவரிடத்தில் நாம் கோரிக்கை, விண்ணப்பம் வைக்கிற போது ஒன்று அவர் உயர்ந்த அதிகாரியாக இருப்பார் அல்லது நமக்குத் தெரிந்த, உதவி செய்கிற நபராக இருப்பார். அப்படிப்பட்டவர் களிடத்தில் தான் நாம் கேட்க முடியும், மன்றாட முடியும், ஜெபிக்க முடியும். ஏனென்றால் அறியப்படாத தேவன் என்று எழுதப்பட்டுள்ளது. அப் 17:23-ல் எப்படியென்றால் நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றார். ஆகவே நாம் ஏறெடுக்கிற ஜெபங்களும், பிராத்தனைகளும் அர்த்தமுள்ளவைகளாக, நம்மை தேவனிடத்தில் கொண்டு போய் சேர்க்கிறதாக, பரலோகத்தை ஊடுருவுகிற ஜெபமாகவே இருக்க வேண்டும். அதைத்தான் வேதாகமத்தில் தேவன் பல இடத்தில் சொல்லியிருக்கிறார். மத் 23:13,14-ல் இயேசு சொன்னார் மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள், நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை. பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள் என்றார். **நீங்கள் ஒன்றும் அறியாமல் நான் அந்த பலி செலுத்துகிறேன், இந்த பலி செலுத்துகிறேன், இந்த உதவி செய்கிறேன்,** என்று சொல்லி, நம்மை நாமே திருப்திபடுத்தி ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். **சங் 50:12-ல் நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன், பூமியும், அதன் நிறைவும் என்னுடையவைகளே** என்றார். இன்றைக்கு நாம் தேவனை உள்ளும், புறமும் நன்றாக அறிந்து, அவர் யார்?, எப்படிப்பட்டவர்?, நம்மிடத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கையை எதிர்பார்க்கிறார், நாம் அவரை எப்படி பணிந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். தாவீது சொல்லுகிறார் **சங் 51:16,17-ல் பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன், தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல, தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்** என்றார். ஆம் இந்த பூமியில் தேவனை அறிந்து, இரட்சகர் யார் என்பதை தெரிந்து, அவருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி கூப்பிடுகிற ஒவ்வொருவரின் ஜெபத்தை அவர் கேட்கிறார். ஆகவே இனி நாம் ஏறெடுக்கிற ஜெபங்கள் சரியான நபரிடத்தில், சரியான விதத்தில் சென்றடைந்து, அதின் பலனை நாம் அனுபவிக்க வேண்டும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் ஜெபங்களை சரி செய்து, அர்த்தமுள்ளதாக மாற்றி, அந்த ஜெபத்திற்குரிய பிரதிபலனை நீங்கள் காண, அனுபவிக்க கிருபை செய்வாராக. போகட்டும் யாருடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை, யாருடைய ஜெபங்கள் கேட்கப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

**இன்றைக்கு நாம் தேவனை உள்ளும், புறமும் நன்றாக அறிந்து, அவர் யார்?, எப்படிப்பட்டவர்?, நம்மிடத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கையை எதிர்பார்க்கிறார், நாம் அவரை எப்படி பணிந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.**

# கேட்கப்படாத ஜெபங்கள்

**புலம்பல் 3:8,44-ல் நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப் போட்டார். ஜெபம் உட்பிரவேசிக்கக் கூடாபடிக்கு உம்மை மேகத்தால் மூடிக் கொண்டீர்.** இந்த வசனங்களில் கேட்கப்படாத ஜெபங்களைப் பற்றி நாம் பார்க்கிறோம். என் ஜெபம் தேவ சமூகத்தில் உட்பிரவேசிக்கக் கூடாபடிக்கு மூடிக்கொண்டீர் அல்லது அடைத்துப் போட்டீர் என்று சொல்லப்பட்டுள்ளது. யார் வேண்டுமானாலும் கூப்பிடலாம், தேவ உதவியை நாடலாம். ஆனால் எல்லாருக்கும் உதவி கிடைப்பதில்லை, எல்லாருடைய ஜெபமும் கேட்கப்படுவதில்லை. எலியாவின் நாட்களில், ஆகாப் ராஜா அரசாண்ட காலத்தில் 400 பாகால்களின் தீர்க்கதரிசிகள், போலி சாமியார்கள் தேவனுடைய நாமத்திலே, டூப்ளிக் கேட்டாக செயல்பட்டு ராஜாவையும் ஜனங்களையும், ஏமாற்றி வைத்திருந்தார்கள். உண்மையைப் பொய்யாக்கி, பொய்யை உண்மையாக்கி ஆதிக்கம் செலுத்தினார்கள். ஜனங்கள் எல்லாரும், ராஜா முதற்கொண்டு இவர்கள் தான் பக்திமான்கள், நடமாடும் சாமியார்கள் என்று மரியாதை கொடுத்து அவர்களை நமஸ்கரித்தார்கள். அவர்கள் சொன்னது தான் வேதவாக்காக இருந்தது. அவர்கள் வைத்தது தான் சட்டமாக இருந்தது. தேசத்தில் கொடி கட்டிப் பறந்தார்கள். நடக்காத ஒன்றை நடந்ததாகச் சொல்லி, தேவன் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லி ஜனங்களை வஞ்சித்து வைத்திருந்தார்கள். இதைக் கண்ட எலியாவுக்கு மனவேதனை உண்டாகி மழை பெய்யாதபடிக்கு ஜெபம் செய்து வானத்தை அடைத்து, பஞ்சத்திலே தேசத்தை



தள்ளினார். அப்பொழுது தான் யார் தேவன்? யார் தெய்வம்? பாகால் அல்லது வானத்தையும், பூமியையும் படைத்தவரா?, யார் ஜெபம் கேட்கப்படும், எது உண்மை, எது ஏமாற்று வேலை, தேசமும், தேசத்தின் ஜனங்களும் பார்க்க வேண்டும் என்று ராஜாவை நிறுத்தி சவால் விட்டார். ராஜாவும் சவாலுக்கு அடிபணிந்து, நீர் சொல்லுகிறபடியே நடக்கட்டும், ஆகட்டும் என்றார். அவர்கள் 400 பேர், எலியா ஒருவர் மட்டும். போட்டி ஆரம்பித்துவிட்டது, முதலாவது 400 பேர் கூப்பிடட்டும் என்று எலியா சவால் விட்டு, வானத்திலிருந்து அக்கினி இறங்க வேண்டும் அது தான் உண்மையான ஜெபம், அது தான் உண்மையான தேவன் என்று சவால் விட்டார். 1 இராஜா 18:24-29 வரை வாசித்தால் அதற்கு ஜனங்கள் எல்லாரும் நல்ல காரியம், நல்ல வார்த்தை என்றார்கள். 26 ஆம் வசனத்தில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி அதை ஆயத்தம் பண்ணி, பாகாலே, எங்களுக்கு உத்தரவு கொடு, உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை. மறுஉத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். மத்தியான வேளையிலே எலியா அவர்களைப் பரியாசம் பண்ணி உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள், அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான் அல்லது அலுவலாயிருப்பான் அல்லது பிரயாணம் போயிருப்பான் அல்லது தூங்கினாலும் தூங்குவான், அவனை எழுப்ப வேண்டிய தாயிருக்கும் என்று பரியாசம் பண்ணினார். காரணம் அவருக்கு தெரியும் அது தேவனல்ல, தெய்வமுமல்ல என்று. சங் 135:15-17 வசனங்களில் அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும், பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை

என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே தான் அவர்கள் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். பதில் இல்லை, உத்தரவும் இல்லை, அவர்கள் கத்தியதிலே பதில் இல்லாதபடியினால் 1 இராஜா 18:28-ல் அவர்கள் உரத்த சத்தமாய் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள் மேல் வடியுமட்டும் கத்திகளாலும், ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக் கொண்டார்கள். ஒரு பதிலும் இல்லை, ஒரு அற்புதமும் நடக்கவில்லை. முதலாவது நீங்கள் ஜெபம் பண்ண போகும் போது. உங்கள் தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர், அவர் உயிருள்ளவரா? ஜீவிக்கிறவரா? என்பதை தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது ஜெபிக்கிற நீங்கள் எப்படிப்பட்டவர்கள், தேவனுடைய பிள்ளைகளா? அல்லது அந்நிய புத்திரரா? என்பதை அறிந்திருக்க வேண்டும். நீதி 15:8-ல் துன்மார்க்கருடைய **பலி கர்த்தருக்கு அருவருப்பானது. செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்.** துன்மார்க்கனுக்கு கர்த்தர் தூரமாயிருக்கிறார். நீதிமான்களின் ஜெபத்தை அவர் கேட்கிறார். எப்படி வேண்டுமானாலும் நான் வாழ்ந்து விட்டு, நான் ஜெபம்பண்ணுவேன் அவர் என் ஜெபத்தைக் கேட்பார் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. **நீதி 28:9-ல் வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது.** ஆம் எல்லாருடைய ஜெபத்தையும் தேவன் கேட்பதுமில்லை, அதற்கு அவர் செவி கொடுப்பதுமில்லை. அது காற்றிலே கலந்து காணாமல் போய்விடும் அல்லது உங்களுக்கே அது திருப்பி வந்து விடும். சில சமயம் கடிதம், கொரியர் வாங்க ஆள் இல்லை என்றால் அது உங்களுக்கே திருப்பி வந்து விடும். **சங் 35:13-ல் நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன், என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது என்றார்.** தள்ளப்பட்ட ஜெபம், புறக்கணிக்கப்பட்ட ஜெபம், திருப்பி அனுப்பப்பட்ட ஜெபம், கேட்கப்படாத ஜெபம். இயேசு சொன்னார் **மத் 7:21-ல் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றார்.** இன்றைக்கு நம் வாழ்க்கை மாற வேண்டும், கிரியைகள் மாற வேண்டும். நம் மனம் புதிதாக வேண்டும், பொல்லாத வழிகளை விட வேண்டும். அவருடைய இரக்கத்தையும், தயவையும் நாம் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் நம் ஜெபம் கேட்கப்படும். இயேசு சொன்னார் **யோவான் 9:31-ல் பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்** என்றார். இன்றைக்கு உங்கள் ஜெபம் கேட்கப்படுகிறதா? பதில் வருகிறதா? எத்தனை மாதங்கள், எத்தனை வருஷங்கள் காலதாமதமாகி, உங்களைச் சோர்வுக்குள்ளாக்கி இருக்கிறது. பிலேயாம் என்ற ஒரு மதிகெட்ட தீர்க்கதரிசி இருந்தான். தேவனுடைய கிருபையையும், வரங்களையும் பெற்ற அவன், உலக ஆசை பிடித்து, பணத்திற்கு ஆசைப்பட்டு, கூலிக்காக, சம்பளத்திற்காக ஆசீர்வதிக்க ஊழியம் செய்யப் போனான். தேவன் அவனை எச்சரித்து, நீ அங்கு போக வேண்டாம், அவர்களை சபிக்க வேண்டாம், நான் வெறுக்காதவர்களை, நீ வெறுப்பது எப்படி? நான் நேசிக்கிறவனை நீ பகைப்பது எப்படி? என்றார். ஆனால் அவனோ விடவில்லை, எனக்கு கூலி தருகிறேன், பணம் தருகிறேன் என்கிறார்கள் என்று எண் 23 ஆம் அதிகாரத்தில் திரும்பத் திரும்ப பலிபீடத்தைக் கட்டி எத்தனை முறை ஜெபித்தாலும் கர்த்தர் அவன்

**முதலாவது நீங்கள் ஜெபம் பண்ண போகும் போது. உங்கள் தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர், அவர் உயிருள்ளவரா? ஜீவிக்கிறவரா? என்பதை தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது ஜெபிக்கிற நீங்கள் எப்படிப்பட்டவர்கள், தேவனுடைய பிள்ளைகளா? அல்லது அந்நிய புத்திரரா? என்பதை அறிந்திருக்க வேண்டும்.**

ஜெபத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, செவி சாய்க்கவுமில்லை. கடைசியில் தேவ தூதரால் எச்சரிக்கப்பட்டு, உயிர் பிழைத்ததே பெரிய காரியமாகிவிட்டது. துன்மார்க்கருடைய ஜெபம் அருவருப்பானது. **லூக்கா 18:11,12-ல் பரிசேயன் நின்று, தேவனே நான் பறிகாரக்காரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்** என்று தன்னைப் பற்றி, தன்னுடைய கிரியைகளைப் பற்றி புகழ்ந்து பெருமைப் பட்டுக் கொண்டு, பெருமையாய், அகந்தையாய் ஜெபித்தான். அந்த ஜெபம் கேட்கப்படவில்லை. ஆயக்காரனுடைய ஜெபமே கேட்கப்பட்டது. இன்றைக்கு கேட்கப்படாத ஜெபங்களும், திருப்பி அனுப்பப்பட்ட ஜெபங்களும் அதிகமாகிறது. நாம் இனி அப்படிப்பட்ட ஜெபங்களை ஏறெடுக்காதபடிக்கு தேவனே! என் மேல் கிருபையாயிரும் என்று நம்மை தாழ்த்தி அவருடைய இரக்கத்தை பெறுவோம் **லூக்கா 16:24—ல் அப்பொழுது அவன், தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும், இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.** அதற்கு தேவன் இல்லை, மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், சுகபோகமாய் வாழ்ந்தாய், உலகத்தின் பலனை எல்லாம் அனுபவித்தாய், இப்பொழுது நீ விதைத்ததை அறுக்கிறாய். நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுக்கிறாய் என்றார். அவன் ஜெபத்திற்கு தேவன் இரங்கவுமில்லை, கேட்கவுமில்லை. பூமியில் அவனுக்கு தேவனைத் தேடவோ, ஜெபிக்கவோ நேரமில்லை. இப்பொழுது பாதாளத்தில் வேதனைப்படும் போது தேவனை நோக்கிக் கதறுகிறான். அதை கேட்பார் இல்லை, அதை கவனிப்பார் இல்லை. பதில் கொடுப்பாரில்லை, பரிதாபமாக தள்ளப்பட்டான். அவன் ஜெபம் திருப்பி அனுப்பப்பட்டது. திரும்ப அவன் மடிக்கே வந்தது. இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரனே, சகோதரியே நம்முடைய ஜெபம் தேவனுடைய சமூகத்தை, தேவனை எட்டுவதாகவும், அவருடைய இரக்கத்தைப் பெறுவதாகவும், அற்புதங்களைச் செய்வதாகவும் இருக்க வேண்டும். அதற்குத்தான் வேதத்தில் இவ்வளவு சம்பவங்களைப் பார்த்தோம். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களுக்கு இரங்குவாராக, ஜெபத்தை கேட்பாராக!.



## கேட்கப்பட்ட ஜெபம்

**லூக்கா 1:13-ல் சகரியாவே, பயப்படாதே!, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது என்றார்.**
நீதிமானுடைய கூப்பிடுதலுக்கு அவர் செவிகொடுக்கிறார். அவர்கள் ஜெபத்தை தேவன் கேட்கிறார். ஒரு பக்கம் தேவன் சிலருடைய ஜெபத்தை கேட்பதில்லை, ஆனால் பலருக்கு இரங்கி, அவர்கள் ஜெபத்தைக் கேட்கிறார். பல வருஷம் பிள்ளை இல்லாமல், வயதான நிலையில் தனிமையாய், கைவிடப்பட்ட சகரியா, எலிசபெத்துக்கு தேவன் அற்புதமாய் இரங்கி, எத்தனையோ வருஷத்திற்கு முன் ஏறெடுத்த இந்த ஜெபங்களுக்கு பதில் கொடுத்தார். அதே போல் யோவான்ஸ்நானகனைக் கொடுத்து கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வழியை ஆயத்தம் பண்ண கிருபை செய்தார். அவமானப்படுத்தப்பட்டு, பிள்ளை இல்லாமல் கதறி அழுத அன்னாளுக்குத் தேவன் இரங்கினார், ஜெபத்தைக் கேட்டார். சாமுவேல் தீர்க்கதரிசியைக் கொடுத்து, இஸ்ரவேல் ஜனங்கள் தேவப்பாதையில் நடக்கவும், தேவனால் நடத்தப்படவும் அவனை வெளிச்சமாக வைத்தார். எங்கெல்லாம் தாமதமாக அல்லது அற்புதமாக பிள்ளை பெற்றார்களோ, குழந்தை பெற்றார்களோ அவர்கள் எல்லாம் அற்புதத்தின் பிள்ளையாக அல்லது தேவனுடைய தீர்க்கதரிசியாக வாழ்கிறார்கள்.

இன்றைக்கு அந்த தேவன் எப்பேர்ப் பட்டவர்களாக இருந்தாலும் அவருடைய வழியில், அவருடைய பாதையில் நடக்கிற, அவருடைய பிள்ளைகளுக்கு ஜெபத்தைக் கேட்டு நன்மை செய்கிறார். தேவ பிள்ளைகளுக்கு, நீதிமான்களுக்கு தேவன் ஜெபத்தைக் கேட்கிறவராய் இருக்கிறார். ஆகவே தான் சங்கீதக்காரன் **ஜெபத்தைக் கேட்பவரே!, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள் என்றார்.** அது மட்டுமல்ல **சங் 34:15-ல் கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது என்றார்.** நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிற கர்த்தர், அவர்கள் கூப்பிடுதலை, ஜெபத்தைக் கேட்கிறார். விண்ணப்பத்திற்கு இரங்குகிறார், பதில் அளிக்கிறார். அற்புதம் செய்கிறார், மட்டுமல்ல ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுக்கிறார். எசேக்கியா என்ற ராஜாவின் வாழ்க்கையைப் பாருங்கள். அவனைக் கொல்லும் கொடிய வியாதி ஒன்று அவனைத் தாக்கின போது தேவனை நோக்கி அபயமிட்டான், கதறினான். காரணம் ஆண்டவராகிய தேவன் சொல்லி விட்டார், உன் வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்து நீ சாகப்போகிறாய் என்று. அவர் சுவர் புறமாய் திரும்பி ஏராளமாய் கண்ணீர் விட்டு அழுதார், கதறினார். எப்படி கதறி அழுதாராம் **2 ராஜா 20:3-ல் ஆ, கர்த்தாவே!, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான்.** ஏராளமாய் கண்ணீர் விட்டான், அழுதான். உடனே தேவன் இரங்கி, மனதுருகி உன் கண்ணீரைக் கண்டேன், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், ஜெபத்தைக் கேட்டேன் என்றார். ஜெபத்தைக் கேட்ட தேவன் என்ன செய்தார், 15 வருஷம் ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுத்தார். அது மட்டுமல்ல, அதுவரை பிள்ளையில்லாத அவனுக்கு ஒரு மகனைக் கொடுத்து மகிழ்ந்திருக்கப் பண்ணினார். அசீரியா ராஜா அவனுக்கு விரோதமாய் கிரியை செய்து, பயமுறுத்திக் கொண்டிருந்தான். அந்த அசீரியா ராஜாவை அழித்து எசேக்கியாவின் ஜெபத்தைக் கேட்டு பதில் தந்து அவன் தலையை நிமிரச் செய்தார். ஆம் நீதிமானுடைய கூப்பிடுதலின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். இன்னும் வேதத்தை வாசித்துப் பாருங்கள்

அப்போஸ்தலர் 10:2,3-ல் இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாய் இருந்த கொர்நேலியு என்ற மனிதன் இயேசு என்றாலே யார் என்று தெரியாதவன், கேள்விப்படாதவன். ஆனால் தேவன் ஒருவர் இருக்கிறார், அவரை நோக்கி ஜெபிக்க வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் அறிந்திருந்தார். அப்படி அவர் தானதர்மம் பண்ணி, ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவன் ஒரு தூதனை அனுப்பி உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சமூகத்தில், அவர் சந்நிதியில் வந்து எட்டியது என்றார். நடந்தது என்ன அவரையும், அவர் குடும்பத்தையும் தேவன் இரட்சித்து, அபிஷேகித்து, இந்த பூமியிலே அவருக்கு மகிமையாக தெரிந்து கொண்டார். ஆம் நம் தேவன் ஜெபத்தைக் கேட்பது மட்டுமல்ல உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கிறவர், உயர்த்துகிறவர். கடந்த டிசம்பர் மாதத்தில் எனக்கு தெரிந்த குடும்பத்தில் திடீரென ஒரு சகோதரனுக்கு பக்கவாத நோய் (ஸ்டேக்) ஏற்பட்டு கோமா நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இங்கெல்லாம் இவரை வைத்துப் பார்க்க முடியாது, இவருக்கு 90 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு விட்டது, இனி பிழைப்பது கடினம் என்றார்கள். இரவு இரண்டு மணிக்கு என்னை தொலைபேசியில் அழைத்து எப்படியாவது ஜெபியுங்கள் தேவன் இரங்கட்டும் என்றார்கள். கண்ணீரோடு ஜெபித்தேன் ஏறக்குறைய 70 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார், இப்பொழுது தேவன் மனம் இரங்கி பரிபூரண சுகத்தைக் கொடுத்துவிட்டார். நான் அவரை சந்திக்க அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். படுத்த படுக்கையாய் கைவிடப்பட்ட நிலையில் இருந்த அவர் எழுந்து சைக்கிள் ஓட்டுகிறார். இன்றைக்குப் பரிபூரண சுகத்தோடு இருக்கிறார். இனி நான் கர்த்தருக்காகத் தான் வாழ்வேன் என்றார். எவ்வளவு அருமையான தேவன் நம்முடைய தேவன். ஆகவே தான் தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர், அவர்கள் கூப்பிடுதலுக்கு இரங்குகிறவர் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே தேவன் அவருடைய பிள்ளைகளின், நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்கிறவர் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தேவன் உங்கள் ஜெபத்தை தள்ளாமலும், தம்முடைய கிருபையை நம்மை விட்டு விலக்காமலும் இருக்கிற தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்டு, உங்கள் வேண்டுதலை நிறைவேற்றி, உங்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து கட்டாயம் உங்களை ஆசீர்வதித்து, உங்களுக்கு அற்புதம் செய்து நடத்துவார். என் தேவன் தாமே இந்த செய்தியை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!.


செம்பட்டியில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
Bro.Arul Stephenson
All India All Night Prayer Fellowship
Evg.L.Vincentraj
Evg.Kalavincentraj
மார்ச்
10,11
வெள்ளிக்கிழமை சனிக்கிழமை
தினமும் காலை 10 மணிக்கு
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்

# எப்பிராயீமே! உன்னை நான் எப்படி கைவிடுவேன்



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நாம் வாழ்கிற இந்த கடைசி நாட்களில் எல்லாவற்றிலும் நாம் கைவிடப்படுகிறதைக் கேள்விப்படுகிறோம். பெரிய பெரிய நிறுவனங்கள் வேலையாட்களை கைவிடுகிறது. பெரிய வேலையிழப்புகள் நேரிடுகிறது. கணவனால் மனைவி கைவிடப்படுகிறாள். தாய் அல்லது தந்தையின் தவறான நடக்கையால் பிள்ளைகள் கைவிடப்பட்டு அனாதையாகிறார்கள். பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி, படிக்க வைத்து, நல்ல திருமணம் முடித்து. நமக்கு உதவுவார்கள் என்றால் பெற்றோறைக் கைவிட்டு மறந்து போகிறார்கள். இந்நிலையில் நம்மை மறக்காமலும், கைவிடாமலும் ஒருவர் நமக்கு உண்டானால் அவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான். அவர் நம்மைப் பார்த்து எப்பிராயீமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன், இஸ்ரவேலே! நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்?, நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன், உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்?, என் இருதயம் எனக்குள் குழம்புகிறது, என் பரிதாபங்கள் ஏகமாய் பொங்குகிறது. ஓசியா 11:8-ல் ஆண்டவர் சொல்லுகிறார் என் மகளே! உன்னை எப்படிக் கைவிடுவேன்?, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மா, செபோயீமைப் போலாக்குவேன் என்கிறார் இந்த அத்மா, செபோயீம் என்றால் சோதோம், கொமோராவைப் போல ஒன்று. உபா 29:23-ல் கர்த்தர் தமது கோபத்திலும், தமது உக்கிரத்திலும் சோதோமையும், கொமோராவையும், அத்மாவையும், செபோயீமையும் கவிழ்த்துப் போட்டார்

என்று பார்க்கிறோம். அதுபோல் நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன் என் பரிதாபங்கள் உன்மேல் ஏகமாய் பொங்குகிறது என்கிறார். ஆண்டவர் இயேசுவின் அன்பு எத்தனை பெரியது. எப்படிப்பட்ட நிலையில் ஆண்டவர் சொல்கிறார். இந்த அதிகாரத்தின் மேற்பகுதியில் நான் தங்களைக் குணமாக்குகிறவர் என்று அறியாமல் போனார்கள். என்னை விட்டு விலகுகிற மாறுபாட்டை கொண்டிருந்து, அவர்களை என்னிடத்தில் வரவழைத்தாலும் ஒருவனும் எழும்புகிறதில்லை என்ற நிலையில் இருக்கும், நம்மைப் பார்த்து, உன்னை எப்படிக் கைவிடுவேன் என்கிறாரே! எத்தனை அன்பு நம்மேல், எத்தனை பாசம் நம்மேல் அவர் வைத்திருக்கிறார். இந்த எப்பிராயீம் யார்? என்று பார்த்தால் ஆதி 41:52-ல் யோசேப்பு எகிப்தில் இருக்கையில் தனக்குப் பிறந்த இளையமகனுக்கு நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப் பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான் என்று பார்க்கிறோம். எகிப்துக்கு யாக்கோபு அழைத்து வரப்பட்ட போது யோசேப்பின் குமாரரை ஆசீர்வதித்து, என் பேரும் ஆபிரகாம், ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது, பூமியில் இவர்கள் மிகுதியாய் பெருகக்கடவர்கள் என்றும், அதிலும் எப்பிராயீம் அதிகமாய் பெருகுவான், அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றான். ஆதியாகமம் 48 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம் இவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டு பெருகவும், பலுகவும் வேண்டிய அவன் வாழ்வு எப்படிப்பட்டதாய் இருந்தது என்று பார்ப்போம்.

## எப்பிராயீமுக்கு விரோதமாய் பேசினேன்

ஆண்டவர் எப்பிராயீமை எப்படி கைவிடுவேன் என்றார். எரேமியா 31:20-ல் எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ?, அவன் எனக்குப் பிரியமான பிள்ளை யல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக் கொண்டே இருக்கிறேன், ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது, அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், அவனுக்கு பெயர் வைக்கும் போதே பலுகவும், பெருகவும் வாக்கைப் பெற்றவன், ஆனால் அவன் அதற்கு தகுதியானவனாய் இருந்தானா? என்றால் பலகுறைகள் அவனில் இருந்தது. அதில் சிலவற்றைப் பார்ப்போம். ஆண்டவர் எப்பிராயீமுக்கு விரோதமாய் பேசினேன் என்பதற்கு என்ன காரணம்?, நியாயாதிபதிகள் 1:29-ல் எப்பிராயீம் கோத்திரத்தார் கேசேரிலே குடியிருந்த கானானியரையும் துரத்திவிடவில்லை, ஆகையால் கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள். எகிப்திலிருந்து ஜனங்களை அழைத்து வரும் போது யாத் 23:31-33 வரை வாசித்தால் சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம் வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன். நான் அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன், நீ அவர்களை உன் முன்னின்று துரத்தி விட்டு, அவர்களோடே உடன்படிக்கை பண்ணாமல், அவர்கள் உன்னை பாவம் செய்யப் பண்ணாதபடி அங்கு குடியிருக்க வேண்டாம். அது உனக்கு கண்ணியாய் இருக்கும் என்றார். அதை எப்பிராயீமர் கேட்காமல், செய்யாமல், கானானியரை துரத்தி விடாமல், அவர்களுடனே அல்லது இவர்களுடனே தங்க அனுமதித்திருந்தார்கள். அப்படித் தானே நாமும் ஆண்டவர் விரும்பாதவற்றை நம்மை விட்டு அகற்றாமல் நம்மோடே வைத்து அல்லது அதற்கு நம்மில் இடமளித்து வாழ்கிறோம். இந்த லெந்து நாட்கள், தபசு காலங்களை கடைபிடிக்கிற நாம் எதை நம்மை விட்டு அப்புறப்படுத்தாமல் வாழ்கிறோம் என்று ஆராய்ந்து பார்த்து சீர்படுத்திக்

**இந்த லெந்து நாட்கள், தபசு காலங்களை கடைபிடிக்கிற நாம் எதை நம்மை விட்டு அப்புறப்படுத்தாமல் வாழ்கிறோம் என்று ஆராய்ந்து பார்த்து சீர்படுத்திக் கொள்ள நம்மை அர்ப்பணிப்போமா?.**

கொள்ள நம்மை அர்ப்பணிப்போமா?. அது மட்டுமல்ல நியாயதி 8:1-ல் எப்பிராயீம் மனுஷர் அவனை நோக்கி, நீ மீதியானியர் மேல் யுத்தம் பண்ணப் போகிறபோது எங்களை அழைப்பிக்க வில்லையே. இப்படி நீ எங்களுக்குச் செய்தது என்ன என்று அவனோடே பலத்த வாக்குவாதம் பண்ணினார்கள். கிதியோன் மீதியானியரோடே யுத்தம் பண்ணப் போகிறபோது கர்த்தர் அதிக கூட்டம் வேண்டாம், முந்நூறு பேரை மாத்திரம் அழைத்துக் கொண்டு போ, மீதியானியரை முறியடித்து இஸ்ரவேலரை இரட்சிப்பாய் என்றார். அதன்படி அவன் செய்தான். ஆனால் இதை அறிந்த எப்பிராயீமர் அவனோடே பலத்த வாக்குவாதம் செய்து, எங்களை ஏன் அழைத்துச் செல்லவில்லை என்று கேட்டு பிரச்சனை பண்ணுகிற, சுபாவம் உடையவர்களாய் இருந்தார்கள். நியாயாதி 12:1-லும் கர்த்தர் யெப்தாவைக் கொண்டு எதிரிகளை வீழ்த்தும் போதும், நீ எங்களை உன்னோடே கூட வரும்படி அழைப்பியாமல் அம்மோன் புத்திரர் மேல் யுத்தம் பண்ணப் போனதென்ன? உன் வீட்டையும், உன்னையும் கூட அக்கினியால் சுட்டுப் போடுவோம் என்றார்கள். உன்னை மாத்திரம் அல்ல, உன் வீட்டையும் சுட்டுப் போடுவோம் என்று மூர்க்கத்தினாலும், கோபத்தினாலும் கூக்குரலிட்டிருப்பார்கள். சண்டை பண்ணுகிற, வாக்குவாதம் பண்ணுகிற சுபாவம் அவர்களிடத்தில் இருந்தது. நம்மிடம் அப்படி இருக்கிறதா? தீத்து 3:2-ல் ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொருமையுள்ளவர்களாய், எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு என்று பவுல் எழுதுகிறார். 1 கொரி 6:7-ல் நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது, அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை. ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?

என்கிறார். இன்றைக்கு வீடுகளில் கூட இந்த சகிப்புத் தன்மையும், பொருமையும் இல்லாமல் இருக்கிறதல்லவா? வாக்குவாதம், சண்டைகள், பிரிவினைகள், பகைகள், வெறுப்பு, கசப்புகள், வைராக்கியங்கள் இருக்கிறதே! பழிவாங்குதல், பதிலுக்குப் பதில் செய்தல், கோபங்கள், மூர்க்கம் இவைகள் நமக்குள் காணும் போது எப்பிராயீமாகிய நமக்கு விரோதமாய் தேவன் பேசினது நியாயமல்லவா?. ஏசாயா 9:21—ல் மனாசே எப்பிராயீமையும், எப்பிராயீம் மனாசேயையும் பட்சிப்பார்கள். மனாசேயும், எப்பிராயீமும் உடன்பிறந்த சகோதரர்கள். ஆனால் பாருங்கள் உடன்பிறந்தவர்களோடு சமாதானமாய் இருக்க முடியாத ஒரு சுபாவம், மனநிலை இருந்தது. ஏசாயா 11:13-ல் எப்பிராயீமின் பொறாமையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் ரோமருக்கு எழுதும் போது ரோமர் 13:13-ல் களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம் என்று சொல்லுகிறார். பொறாமை ஒரு எலும்புருக்கி என்று வேதம் சொல்லுகிறது. பொறாமை என்ற குணம் இல்லாமல் மற்றவர்கள் நலனில் மகிழ்ச்சியடைவோம். இன்னும் ஓசியாவின் புத்தகத்தில் அநேக காரியங்களைப் பார்க்கிறோம். ஓசியா 4:17-ல் எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். எப்பிராயீம் எவ்வளவு பெரிய தவறைச் செய்கிறான், விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். என்னையன்றி வேறே தெய்வம் உனக்கு உண்டாயிருக்க வேண்டாம் என்று ஆண்டவர் சொன்னாரே!, ஆனால் அவனோ விக்கிரகங்களோடு இணைந்திருந்தான். 1 கொரி 10:7-ல் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் எனக்குப் பிரியமானவர்களே! விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள் என்றும், கொலோ 3:5-ல் விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை ஆகிய இவைகளை உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் என்கிறார்.

**பழிவாங்குதல், பதிலுக்குப் பதில் செய்தல், கோபங்கள், மூர்க்கம் இவைகள் நமக்குள் காணும் போது எப்பிராயீமாகிய நமக்கு விரோதமாய் தேவன் பேசினது நியாயமல்லவா?**

அழிப்பதற்குப் பதிலாக இணைந்திருக்கிறார். ஓசியா 5:13-ல் தனக்கு வியாதி ஏற்பட்ட போது அசீரியணன்டைக்குப் போனான். இஸ்ரவேலின் ராஜா அகசியா மேல் வீட்டிலிருந்து தவறி விழுந்து வியாதிப்பட்ட போது, தான் வியாதி நீங்கிப் பிழைப்பேனா? என்று எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூலிடத்தில் விசாரிக்க அனுப்புகிறான். இதை அறிந்த எலியா எதிர்கொண்டு போய் இஸ்ரவேலிலே தேவன் இல்லை என்ற நீங்கள் பாகாலிடம் போகிறீர்கள் என்று கடிந்து கொண்டான் என்று 2 ராஜா 1:2,3-ல் வாசிக்கிறோம். இன்றைக்கு கர்த்தரை விட மிக முக்கியமாக நாம் எண்ணுகிற காரியங்கள் என்ன? ஆபிரகாமிடம் என்னை விட நீ அதிகமாய் நேசிக்கிற உன் ஏக புத்திரனை இந்த மலையில் பலியிட வேண்டும் என்றார். இன்றைக்கு நம் வாழ்வில் இருக்கும் விக்கிரகம் என்ன? யாரை நாடிப் போகிறோம். யாரிடத்தில் அதிகம் இணைந்திருக்கிறோம். நம் வேதம், நம் தேவனாயிருக்கிற வார்த்தை நம்மில் இணைந்திருக்கிறதா? இல்லாவிட்டால் செல்போன் நம்மை ஆக்கிரமித்து அதில் நாம் இணைந்தி ருக்கிறோமா?. அதில் உள்ள வேண்டாத ஆபாசங்கள், பொழுது போக்குகள், நமது நேரத்தை திருடுகிறதா? அவசியமானதை மட்டும் நாம் உபயோகிக்க கற்றிருக்கிறோமா? எதில் நாம் இணைந்திருக்கிறோம்? **ஓசியா 7:8-ல் எப்பிராயீம் அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறான், எப்பிராயீம் திருப்பிப் போடாத அப்பம், 11-ஆம் வசனத்தில் எப்பிராயீம் பேதையான புறாவைப் போல இருக்கிறான். அவனுக்குப் புத்தியில்லை என்று வாசிக்கிறோம்.** பலவிதமான அந்நிய காரியங்கள் நம்மில் கலந்து விட்டது. இதிலிருந்து வேறு பிரிக்கப்பட்டவர்கள் வாழ்வில் கூட திரும்ப இவைகள் தலை தூக்கியிருக்கிறது. எந்த ஒரு காரியத்தையும் செய்ய ஞானம், அறிவு, புத்தியில்லை. பேதையான புறாவைப் போல தத்தளிக்கிறோமே! நாம் இதை இப்படியே விட்டு விடலாமா? கூடாது. இன்னும்



**ஓசியா 12:8-ல் எப்பிராயீம் நான் ஐசுவரியவானானேன், நான் பொருளைச் சம்பாதித்தேன். நான் பிரயாசப்பட்டுத் தேடின எல்லாவற்றிலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுபிடிக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறான்.** ஆகாரத்திரட்சி, பொருளை சம்பாதித்த திருப்தி, நல்ல வருமானம், நான் செய்தேன், எனக்குத் தெரியும், அதினால் உண்டான பெருமிதம், பெருமை நான் பிரயாசப்பட்டுத் தேடின எல்லாவற்றிலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுபிடிக்கப்படுவதில்லை என்ற துணிகரமான நடக்கைகள் இருக்கிறது. நான் சம்பாதிக்கிறேன், அனுபவிக்கிறேன். யார் என்னைக் கேட்பது, யாருக்கு நான் கணக்குச் சொல்ல வேண்டும். என் இஷ்டம் என்று வாழ்கிற வாழ்க்கை இருக்கிறது. ஓசியா 11:12-ல் எப்பிராயீமர் பொய்களினாலும், வஞ்சகத்தினாலும் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார். உண்மையற்ற வாழ்க்கை செய்கிறேன் என்று சொல்வது, ஆனால் செய்வதில்லை இதுவும் எப்பிராயீமரிடம் உண்டு. யோசு 17:14-18 வரை வாசிக்கும் போது யோசேப்பின் புத்திரராகிய இவர்களை கர்த்தர் ஆசீர்வதித்தினால் நாங்கள் ஜனம் பெருத்தவர்களாயிருக்கிறோம். எங்களுக்கு இடம் போதவில்லை என்று யோசுவாவிடம் வந்து கேட்கிறார்கள். அதற்கு யோசுவா உங்களுக்கு இடம் நெருக்கமாயிருந்தால் காட்டு தேசத்துக்குப் போய் உங்களுக்கு இடம் உண்டாக்கிக் கொள்ளுங்கள் என்கிறான். ஆனால் அவர்கள் அங்கே இருக்கிற கானானியரிடத்தில் இருப்பு ரதங்கள் உண்டு என்கிறார்கள். யோசுவா நீங்கள் ஜனம் பெருத்தவர்கள், மகா பராக்கிரமமும் உங்களுக்கு உண்டு. நீங்கள் செயல்பட்டால் மலை தேசம் உங்களுடையதாகும். அது இப்பொழுது காடாய் இருக்கிறபடியால் அதை வெட்டித் திருத்துங்கள். அது கடையாந்திரம் வரை உங்களுடையதாகும். கானானியரிடத்தில் இருப்பு ரதங்கள் இருந்தாலும், அவர்கள் பலத்தவர்களாய் இருந்தாலும் நீங்கள் அவர்களைத் துரத்துவீர்கள் என்றான். இன்றைக்கு அநேகருக்கு ஆசீர்வாதம் வேண்டும் செயல்பட விருப்பமில்லை. ஜெபமா அது பார்க்கலாம். நான் தான் இன்னொருவரை ஜெபிக்க சொல்லி விட்டேனே. சுவிசேஷம் அறிவிக்கனுமா? அதற்குத் தான் ஊழியக்காரர்கள் இருக்கிறார்களே! நான் பணம் வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன் என்பது உண்மையில் எங்களால் எதுவும் செய்ய இயலாது. அதனால் இதைக் கொடுத்தாவது நான் செயல்படுகிறேன் என்பவர்கள் பரவாயில்லை.

ஆனால் செயல்படத் தெரிந்தும், முடிந்தும் செய்யாமல், சோம்பேறிகளாக இருந்து கொண்டு எங்களுக்கு ஆசீர்வாதம் வேண்டும் என்று சொல்லுகிறவர்களாக நாம் இருக்கக் கூடாது. உங்கள் கண் முன்னே இருக்கும் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டைக்கு நடத்தும் பாரம் நம்மிடம் உண்டா? அவர்களுக்காக ஜெபிக்கவாவது செய்கிறோமா? இத்தனை குறைபாடுகள் நிறைந்த எப்பிராயீமராகிய நம்மை தேவன் நேசிக்க முடியுமா? ஒரு சின்னக் காரியத்தில் நாம் விரும்புகிறபடி செய்யாவிட்டால் அல்லது நாம் விரும்பாத ஏதோ ஒன்றை ஒருவர் செய்து விட்டால் நாம் பொறுத்துக் கொள்வோமா?. ஆனால் தேவன் அவர் நமக்கு உருக்கமாய் இரங்குவேன் என்கிறார். எப்பிராயீமே! நீ எனக்கு அருமையான குமாரனல்லவா?, பிரியமான பிள்ளையல்லவா?. நான் உனக்கு விரோதமாய் பேசினேன், ஆனால் என் உள்ளம் உனக்காக பொங்குகிறது.

## இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன?

எப்பிராயீம் இரக்கம பெற என்ன செய்தான். ஓசியா 14:8-ல் இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான். நான் அவனுக்குச் செவிகொடுத்து, அவன் மேல் நோக்கமாயிருந்தேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இதுவரை இப்படி வாழ்ந்து விட்டேன். இனி அதற்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை என்று துண்டித்துக் கொண்டான். தான் வாழ்ந்த விதத்திற்காக மனஸ்தாபப்பட்டு அழுதான் எரே 31:9,18,19 வசனங்களில் அழுகையோடும், விண்ணப்பங் களோடும் வருவார்கள், அவர்களை வழி நடத்துவேன். அவர்களைத் தண்ணீருள்ள இடறாத செம்மையான வழியிலே நடக்கப் பண்ணுவேன். இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்ட புத்திரனாயிருக்கிறான் என்கிறார் என் பிள்ளை நீ, எப்பிராயீம் உன்னை நான் எப்படிக் கைவிடுவேன். நீ நடந்து கொண்ட சில காரியங்களுக்காக நான் உன்னை சிட்சிக்க வேண்டியதாயிருந்தது. உனக்கு இந்த தண்டனை தரும் போது, உனக்கு விரோதமாய் பேசுகிற போது என் உள்ளம உன்னை நினைத்துக் கொண்டேயிருக்கிறது. நீ வருந்தமாட்டாயா? என்னிடத்தில் திரும்பமாட்டாயா? என்று ஏங்கினேன் என்கிறார். எப்பிராயீம் தன்னைத் தாழ்த்துகிறான். ஆண்டவரே! நீர் என்னைத் தண்டித்தீர், இல்லையென்றால் நான் பணியாத மாடு போல, என் இஷ்டம் போல அலைந்திருப்பேன். என்னை மன்னியும், என்னைத் திருப்பும், நான் திரும்புவேன் நீரே என் தேவனாகிய கர்த்தர் நான் மனஸ்தாபப்படுகிறேன். என்னை, என் தவறை அறிந்து என் விலாவில், என் மார்பில் அடித்துக் கொண்டு, இப்படி நடந்து விட்டேனே என்று வெட்கி நாணிக் கொண்டிருக்கிறேன். எனக்கு வந்த நிந்தை, அவமானம், சிறுமை எல்லாம் உம்மால் வந்தல்ல, என்னால் வந்தது. நான்தான் அதற்குக் காரணம் என்று புலம்புகிறான். ஆண்டவர் அதை நிச்சயமாய் கேட்டேன் என்று சொல்லித் தான் எப்பிராயீம்! நீ எனக்கு அருமையான குமாரன் அல்லவா? எனக்குப் பிரியமான பிள்ளையல்லவா? உனக்கு உருக்கமாய் இரங்குவேன் என்கிறார்.

இதுவரை இப்படி வாழ்ந்து விட்டேன். இனி அதற்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை என்று துண்டித்துக் கொண்டான். தான் வாழ்ந்த விதத்திற்காக மனஸ்தாபப்பட்டு அழுதான்

## எப்பிராயீமே நான் உன்னை அழிக்கமாட்டேன்

நம் இயேசு நல்லவர், மிகுந்த கிருபையும் இரக்கமுமுள்ளவர். இவ்வளவு தீமைகள் நிறைந்தவர்களாகிய நம்மை அவர் நேசிக்கிறார். அதனால் தான் இயேசு சிலுவையில் மரித்தார். இவர்கள் மேல் உள்ள தண்டனைகளை நான் சுமக்கட்டும் என்று பொன்னினாலும், வெள்ளியினாலும் நம்மை மீட்காமல், குற்றமற்ற மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலேயே மீட்கப்பட்டீர்களென்று



1 பேதுரு 1:18,19-ல் பேதுரு எழுதுகிறார். இயேசு எனக்காக இரத்தம் சிந்தி மரித்தார். அவரது சிலுவை மரணத்தினால் எனக்கு மீட்பு உண்டாயிருக்கிறது என்று விசுவாசியுங்கள். **ஓசியா 11:9-ல் என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன். எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன், ஏனென்றால் நான் மனுஷனல்ல தேவனாயிருக்கிறேன். நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர். ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்.** நான் உன்னை கைபிடித்து நடத்தி, உன்னை குணமாக்க விரும்புகிறேன் என்று சொல்லுகிறார். இன்றே இயேசுவிடம் நம்மை அர்ப்பணிப்போமா? எப்பிராயீமே உன்னை நான் எப்படி கைவிடுவேன், என்னிடம் வா! நான் உன்னை வாழ வைப்பேன். நீ ஏன் சாக வேண்டும், நீ ஏன் அழிந்து ஆக்கினை அடைய வேண்டும். நான் உன்னை மன்னித்து, நான் உன்னை வாழ வைப்பேன் என்று அழைக்கிறார். இயேசுவின் கரங்களில் நம்மைக் கொடுப்போம். என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவரையும் தம் அன்பின் கயிறுகளால் கட்டி அணைத்துக் கொள்வாராக!.



மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்

# மதுரையில் எழுப்புதல்

# உபவாச

## ஜெபம்



சகோதரி
கலாவின்சென்ட்ராஜ்

சகோதரர்
வின்சென்ட்ராஜ்

மார்ச்
**18**
சனிக்கிழமை
9:30am to 2:00pm

தொடர்புக்கு
94428 00449
94428 00447

இடம்
**இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை**

# நான் வாழ மரித்தீரே, எனக்காக உயிர்த்தீரே... உமக்காகவே வாழுவேன்



சகோதரி. பிரேமாடேவிட்

மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும், இப்படியாயிற்று. கலா 3:13,14.

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, நாம் வாழ்வதற்காக, நமக்காக சாபமாகிய சிலுவையில் மரித்தவரும், நமக்காகவே, உயிர்த்தவருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

நம்முடைய குடும்பங்களில் நாம் பல்வேறு கஷ்டங்களின் வழியாகத் தான் வந்து கொண்டிருக்கிறோம். அவைகளில் பெரும்பாலும் சாபங்களே. விக்கிரகங்களுக்கும், வீணான காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவனை அசட்டை பண்ணும் போது தேவனால் நமக்கு சாபம் வருகிறது. அதே சமயம் அவருக்குக் கீழ்படிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டால் ஆசீர்வாதம் 100./. உறுதி. இன்றைய நாட்களில் உங்களில் அநேகர், நீங்களும் கூட அதிகமான மன அழுத்தம், திரும்பத் திரும்ப தவறுகளை (பெற்றோருக்குத் தெரியாமல்) செய்து குற்ற உணர்வுகளினால் பிடிக்கப்பட்டு ஒன்னுமே செய்ய பிடிக்கலை,

நான் எதற்கு உயிரோடு வாழனும், இருந்து என்ன பிரயோஜனம்? இருக்கிறதற்கு சாகலாம் என்று உங்களுக்குள்ளே நீங்கள் விரக்தியடைந்து, சாவைத் தேடிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? உங்களைப் பார்த்து தான் ஆண்டவர் சொல்லுகிறார், நீ வாழத்தான் நான் மரித்தேன். உன்னைப் பின் தொடர்ந்த சாபத்தினால் தான் நீ வேதனைப்பட்டாய், உன்னை விடுவிக்கவே நான் மரித்தேன். சாபத்தையே சுமந்து திரிந்த நீ இனி ஆசீர்வாதமாய் வாழ முடியும் என்று ஆண்டவர் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். பெற்றோர்கள், பெரியவர்கள், ஆசிரியர்கள், உங்கள் நலத்தையும், உயர்வையும் பிடிக்காதவர்கள் சொன்ன அனைத்து சாப வார்த்தைகளையும் சிலுவையிலே ஆண்டவர் முறித்துப் போட்டபடியினாலே இனி நீங்கள் விடுதலையாய் வாழ முடியும். நான் ஒரு கிறிஸ்தவ பிள்ளை தான் நானும் சாபத்தின் சின்னம் போல கஷ்டப்பட்டுத்தான் இருக்கிறேன் என்கிறீர்களா? நாம் அனைவரும் செய்ய வேண்டியது என்ன என்று பார்ப்போம்.

## நம்முடைய பாவங்களை நாம் இயேசுவிடம் அறிக்கை செய்ய வேண்டும்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1:9.

**ஆண்டவர் இயேசுவிடம் என் பெற்றோரும், நானும் செய்தது பாவம், தவறு, நான் பாவி என்று உம்மிடம் ஒத்துக் கொள்கிறேன். இயேசுவே உம் இரத்தத்தால் என்னைக் கழுவும்.**

நாம், நம் பெற்றோர் செய்த பாவங்களே, நம்மேல் சாபங்களாய் வருவதினால் பாவத்தை மன்னித்து நம்மை வாழ வைப்பதற்கும், ஆண்டவர் இயேசுவிடம் என் பெற்றோரும், நானும் செய்தது பாவம், தவறு, நான் பாவி என்று உம்மிடம் ஒத்துக் கொள்கிறேன். இயேசுவே உம் இரத்தத்தால் என்னைக் கழுவும். உம்முடைய பிள்ளையாய் என்னை ஏற்றுக்கொள்ளும். நான் பாவம் செய்வதற்கு காரணமான நபர்கள், தீய பொருட்கள், சாத்தானோடு தொடர்புடைய அனைத்தையும் விட்டு விடுகிறேன் என்று சொல்லுங்கள். இனம் புரியாத தெய்வீக சமாதானம் உங்களை நிரப்பும். பாவ சாபங்களிலிருந்து விடுதலையாவீர்கள்.

## இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்ததை விசுவாசித்து அறிக்கை செய்ய வேண்டும்.

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். ரோமர் 10:9,10. இயேசு கிறிஸ்து நமக்காக, உங்களுக்காக, உனக்காக சிலுவையில் மரித்ததை, அவர் உயிரோடு எழுந்ததை, இருதயத்தில் விசுவாசித்து, நம்பி உங்கள் வாயினாலே நீங்கள் அறிக்கையிட்டாலே போதும் நீங்கள் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாவீர்கள். இயேசு தான் தேவனுடைய குமாரன், அவராலேயன்றி வேறே

எந்த வழியும், நம்பிக்கையுமேயில்லை. உலகத்திலுள்ள எத்தனையோ கோடி மக்கள் இந்த உண்மையை விசுவாசித்து அறிக்கையிட்டு, இயேசுவே என் ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டு விடுதலையாய் வாழும் போது நீங்கள் ஏன் மரிக்கிறீர்கள். நீங்கள் ஏன் இயேசுவே நீர் எனக்கு வேண்டும், நீரே என் இரட்சகர் என்று சொல்லக்கூடாது?. எனக்காக மரித்தீரே, எனக்காக உயிர்த்தீரே இயேசுவே என் ஆண்டவர்! என்று விசுவாசத்தோடு சொல்லி தொடர்ந்து இயேசுவுக்காய் வாழுங்கள். விடுதலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**இயேசு கிறிஸ்து நமக்காக, உங்களுக்காக, உனக்காக சிலுவையில் மரித்ததை, அவர் உயிரோடு எழுந்ததை, இருதயத்தில் விசுவாசித்து, நம்பி உங்கள் வாயினாலே நீங்கள் அறிக்கையிட்டாலே போதும் நீங்கள் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாவீர்கள்.** ....

**நமக்கு விரோதமாக தீமைகளையும், தவறுகளையும் செய்தவர்களை மன்னிக்கிறேன் என்று சொல்ல வேண்டும்.**

எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே. லூக்கா 11:4. இயேசு கிறிஸ்து நம் பாவங்களை மன்னித்தது போல, பிறர் நமக்குச் செய்த தீமைகளை, தவறுகளை மன்னிப்பது சாதாரண காரியமல்ல. நாம் மன்னிக்கிறோம் என்று சொன்னாலும், அவர்கள் பேசின வார்த்தைகள் பேசின விதங்கள் நம்மை அதினின்று விடுதலை பெற விடாமல் தடை செய்யும். ஆனால் நல்ல சமாரியனாம் நம்முடைய ஆண்டவர், பரிசுத்த ஆவியானவர் பிறரை மன்னிக்கவும், மறக்கவும் நமக்கு உதவி செய்வார். உங்களை வேதனைப்படுத் தினவர்களின் பெயரைச் சொல்லி ஆண்டவரே அவர்களை மன்னிக்கிறேன் என்று சொல்லுங்கள். இது உங்களால், நம்மால் முடியாத காரியமாய் இருக்கலாம் ஆனால் ஆவியானவர் இந்த நல்ல தீர்மானத்திற்கு உங்களுக்கு உதவி செய்து, பாவ சாபங்களில் இருந்து உங்களை விடுதலையாக்குவார். கர்த்தரே ஆவியானவர், ஆவியானவர் எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு 2 கொரி 3:17. விடுதலை நாயகனாம் ஆண்டவர் இயேசு தாமே பாவ சாப வியாதி, சாத்தானிடமிருந்தும் விடுவித்து உங்களை வாழ வைப்பாராக!.



# கழுதை

# கற்றுக் கொடுத்த பாடம்

ஒரு ஏழை சலவைத் தொழிலாளிக்கு ஒரு வயதான கழுதை இருந்தது. அவருக்கு வேலை பளு அதிகமாயிருந்த போது, அந்த கழுதை அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. ஒரு நாள் தண்ணீருக்காக அவர் வெட்டியிருந்த கிணற்றினுள் கழுதை விழுந்து விட்டது. சலவைத் தொழிலாளி அதைப் பல இடங்களில் தேடியும் கிடைக்காமல் பின்பு கிணற்றிற்குள் இருப்பதைப் பார்த்தக் கவலைப்பட்டார். என்ன செய்வதென்றறியாமல் அதை (கழுதையை) மண்ணைப் போட்டு மூடிக் கொன்று விட்டு, தான் வேறே வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினார். ஆனால் கழுதையோ தன் எஜமான் வந்து விட்டார், என்னை எப்படியும் காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கையில் உற்சாகத்தோடு இருந்தது. ஐயோ, பரிதாபம் கழுதையின் அந்த நம்பிக்கையில் மட்டுமல்ல கழுதையின் மேலே மண் விழுந்தது. ஆனால் அது கழுதைக்கு தெரியவுமில்லை, புரியவுமில்லை. சலவைத் தொழிலாளி தள்ளிய மண் தன்மேல் விழுந்ததை உதறி, அதன் மேல் ஏறி மிதித்து, மிதித்து அங்கேயுள்ள கற்களையும் மிதித்து, துள்ளிக் குதித்து தன் எஜமானின் வீட்டிற்குச் சென்றது. அதைப் பார்த்த சலவைத் தொழிலாளிக்கு அப்பத்தான் புரிந்தது இருப்பதில் முயற்சி செய்து, முன்னேற வேண்டியது தான் என்று. கழுதை தனக்கு கற்றுக் கொடுத்த பாடத்தினால் அவரும் கவலை நீங்கி புது உற்சாகத்தோடு வீட்டிற்குச் சென்றார். என்ன குட்டீஸ் கழுதையின் எஜமானனைப் போல, சரியாகப் படிக்க முடியாததால, உடல் சுகவீனம், வீட்டில் பணக்கஷ்டம், இன்னும்



அப்பா, அம்மா, டீச்சர் சத்தம் போடும் போது பயந்து போய், சோர்ந்து போய்ட்டீங்களா? சோர்ந்து போகாதீங்க அந்த கழுதை தன் மேல் விழுந்த மண்ணையே மிதித்து, மிதித்து மேலே வந்து தன் எஜமானுக்கே வேலை செய்ய உற்சாகமாக ஓடிருச்சில்ல, அதைப் பார்த்த எஜமானும் உற்சாகமானாரே. நீங்களும் உற்சாகமாக, நம்பிக்கையாக இருங்க, நல்லா படிங்க இயேசப்பா உங்களுக்கு உதவி செய்ய, உங்கப்பக்கத்திலே தான் இருக்கிறார். பைபிளில் கிதியோன்னு ஒரு அண்ணன் இருந்தாங்க. அவங்க ரொம்பவே பயப்படுவாங்க, அவங்க காலத்தில இயேசப்பாவுடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேல் ஜனங்களுடைய ஆசீர்வாதத்தை, ஆடுமாடுகளை, விளைச்சலை எதிரிகள் வந்து அடிச்சிட்டுப் போயிருவாங்க. நல்லா சாப்பிட முடியாம, நிம்மதியாய் தூங்க முடியாம ரொம்பவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது, இந்த கிதியோன் அண்ணனை மட்டும், பயந்தாலும் ஏதாவது முயற்சி செய்து முன்னேற வேண்டும். மக்களை காப்பாற்ற வேண்டும் என்று, வேலை செய்ய சென்ற போது தான் **நான் உன்னோடு இருக்கிறேன், நீ அந்த எதிரிகளிடமிருந்து இஸ்ரவேல் மக்களைக் காப்பாற்றுவாய், உனக்கு இருக்கிற இந்த கொஞ்ச பெலத்தோடே போன்னு ஆண்டவர் சொன்னார்.** அப்படியே அவர் போய் எதிரிகளை ஜெயித்து, இஸ்ரவேல் மக்களைக் காப்பாற்றினார். கிதியோன் அண்ணனின் முயற்சிக்கு பெலனும் கொடுத்து, வெற்றியும் கொடுத்து தலைவனாக உயர்த்தினார். கழுதையின் முயற்சியால் எஜமானுக்கு உற்சாகமும், மீண்டும் வேலையும் கிடைத்தது. நீங்களும் முயற்சி செய்து முன்னேறுங்கள். இயேசப்பா உங்களுக்கு அதை வாய்க்கப் பண்ணுவார்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா இதுவரை என் கவனக்குறைவாக, முயற்சி செய்து படிக்காம, அறிவுரைகளை அசட்டை பண்ணினதை மன்னியுங்க. இயேசப்பா நான் சோம்பலாயில்லாமல், பயப்படாமல், கிதியோன் அண்ணனை மாதிரி முயற்சி செய்து படிக்க, வேலைகளை செய்ய எனக்கு உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்

### மனப்பாட வசனம்

உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ, நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய், உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா!.
நியாயாதிபதிகள் 6:14



# பரிகாரியாகிய கர்த்தர் செய்த நன்மைகள்



## சகோதரி. லூர்து - காரைக்குடி

என் சரீரத்தில் மூன்று ஆப்ரேஷன் செய்யப்பட்டதால் நான் மிகவும் பெலவீனப்பட்டு இருந்தேன். இதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்படும். AC-யில் இருந்துவிட்டு யாராவது என் அருகில் வந்தால் அந்த வாசனையின் நிமித்தம் உடனே எனக்கு மயக்கம் வந்துவிடும், இதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். தங்களது நேரலை நிகழ்ச்சியில் எனக்கு நல்ல சரீர சுகத்திற்காகவும், இந்த அலர்ஜியில் இருந்தும், மூச்சு திணறலிருந்தும் விடுதலை கிடைக்க எனக்காக ஜெபிக்குமாறு ஜெபக்குறிப்பு அனுப்பினேன். தங்களது ஜெபக்குழுவினர்கள் எனக்காக ஜெபிப்பதாகவும், வேதவசனத்துடன் பதில் அனுப்பினார்கள். அந்நாள் முதல் அந்த வார்த்தையை சொல்லி விசுவாசத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தேன். அன்று நிகழ்ச்சியிலும் ஜெப வேளையில் சகோதரர் அவர்கள் மூச்சு திணறல் வியாதியினால் கஷ்டப்படுகிற ஒவ்வொருவருக்கும் தேவன் இன்று அதிலிருந்து தெய்வீக சுகத்தை கொடுக்கிறார் என்று சொல்லி ஜெபித்தார்கள். அன்றிலிருந்து எனக்கு அந்த மூச்சு திணறல், அலர்ஜி, மயக்கம் வருவது நின்று விட்டது. தேவன் எனக்கு சுகம் தந்து விட்டார். அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

## சகோதரி. ரோஸ்லின் - கிருஷ்ணகிரி

என் சரீர பெலவீனத்தின் நிமித்தம் நான் மிகவும் சோர்ந்து போய் இருந்தேன். அப்பொழுது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் நேரலை நிகழ்ச்சியை Youtube பார்த்தேன். 69-ஆவது திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாம் நேரலை நிகழ்ச்சியில் சகோதரரும், சகோதரியும் பாடல்களைப் பாடி ஆராதனை நடத்தினார்கள். பின்பு சகோதரர் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள். அதை நான் பார்த்த போது விசுவாசத்தில் பெலப்பட எனக்கு உதவியாக இருந்தது. மட்டுமல்ல நிகழ்ச்சி முடியும் போது என் சரீர பெலவீனம் என்னை விட்டு நீங்கினதை உணர்ந்தேன். தற்போது நான் நன்றாக இருக்கிறேன். இந்த நிகழ்ச்சிக்காக நான் தேவனை துதிக்கிறேன். தேவனுக்கே மகிமை.

## சகோதரர். சீதாராமன் - சென்னை

நான் இயேசுவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவர். என் குடும்பத்தில் தேவனை அறிகிற பாக்கியம் எனக்கு கிடைத்தது. என் குடும்பத்தினர் பக்தி வைராக்கிமானவர்கள். இன்னும் அவர்கள் தேவனை அறியவில்லை. இந்நிலையில் எனக்கு நிரந்தரமான வேலை இல்லாததால் என் குடும்பத்தில் சமாதானக்குறைவும், சண்டையுமாகத்தான் இருக்கும். நான் மனம் உடைந்து போன நிலையில் எங்கேயாவது போய்விடலாம் என்று நினைத்திருந்தேன். தங்களது நேரலை நிகழ்ச்சியை தற்செயலாக Youtube பார்த்தேன் அன்று நிகழ்ச்சி முழுவதும் தேவன் என்னோடு பேசினார். எனக்குள் மன அமைதியும், சமாதானமும் வந்தது. தேவனுடைய வார்த்தை என்னை தேற்றியது. இந்த நிகழ்ச்சிக்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். தொடர்ந்து பார்த்து வருகிறேன்.

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

## உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

**ADMINISTRATIVE** OFFICER'S ........ 2

**Manager** Ministry Operation's ........ 1

**Office Assistant's** With Driving Skill ........ 2

**Cook** To cook for 20 Members ........ 2

**Volunteer** Prayer Warriors ........ 15

இப்பொழுதே! விண்ணப்பியுங்கள்

Whatsapp
+91 7825 04 7825
+91 9498 00 0449

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

**MANAGER - MEDIA OPERATIONS**

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

**GRAPHIC DESIGNER**

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

**CONTENT WRITER**

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

**PROGRAM PRODUCER / DIRECTOR**

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid

**VIDEO EDITOR**

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

**SOUND ENGINEEER**

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

**MOTION GRAPHICS DESIGNER**

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

**CAMERAMAN**

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

**PHOTOGRAPHER**

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.




உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்

அனுப்ப வேண்டிய எண்

**944 28 00 449**